<u>சாட்சிகளின் வாக்குமூலம்.</u>

<u>பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 ( I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.</u>

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.</u>

**<u>அசல் வழக்கு எண்.264/2008</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாக்குமூலம் | - | வா.சா.1 | தொடங்கும் நேரம் | : | 01.23 p.m. |
| | | | முடிவுறும் நேரம் | : | 01.36 p.m. |
| பெயர் | : | பழனிவேல் என்கிற வீராசாமி | மதம் | : | |
| த/பெ. | : | நடேசன் | தொழில் | : | |
| கிராமம் | : | மருதாடு | வயது | : | |
| தாலுக்கா | : | வந்தவாசி | நாள் | : | **08-07-2025** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு ஜூலை திங்கள் **08**ஆம் நாள் சாட்சியம்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் வாதியாவேன். எனது முதல் விசாரணைக்காக முதன்மை சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **01.03.1956** | **தேதியிட்ட உயில் சாசனம் - சான்றிட்ட நகல்** | **வா.த.சா.ஆ.1.** |
| **02.** | **--** | **தாவா சொத்திற்கான பட்டா. (பட்டா எண்.785)- அசல்.** | **வா.த.சா.ஆ.2.** |
| **03.** | **--** | **தாவா சொத்திற்கான பட்டா. (பட்டா எண்.720)- அசல்.** | **வா.த.சா.ஆ.3.** |
| **04.** | **--** | **தாவா சொத்திற்கான பட்டா. (பட்டா எண்.1967)- அசல்.** | **வா.த.சா.ஆ.4.** |
| **05.** | **15.11.1960** | **தேதியிட்ட கந்தசாமி ஆச்சாரி இறப்பு சான்றிதழ் - அசல்.** | **வா.த.சா.ஆ.5.** |

| | | | |
|---|---|---|---|
| **06.** | **12.05.1966** | **தேதியிட்ட அமிர்தம்மாளின் இறப்பு சான்று - அசல்** | **வா.த.சா.ஆ.6.** |
| **07.** | **--** | **திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனுவிற்கான ஒப்புகை சீட்டு - நகல்** | **வா.த.சா.ஆ.7.** |
| **08.** | **--** | **வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள வரி ரசீது - அசல்** | **வா.த.சா.ஆ.8.** |
| **09.** | **14.06.1993, 21.02.1995, 05.03.2006, 06.03.2008,** | **தேதியிட்ட வாதி பெயரில் உள்ள ரசீதுகள் - எண்ணிக்கை-4 - அசல்.** | **வா.த.சா.ஆ.9.** |

மேற்படி **வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.9** வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. தாவாப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக்கொள்கிறேன்.
(**வா.சா.ஆ.7 ஆவணம் 1,5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**)

(**1,5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது**. )

ஒம்/- செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.